


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மதுரையில் உள்ள துவாரகா பேலஸ் அரங்கில், மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் விருதுநகர் கோட்டங்களைச் சார்ந்த வணிகர்களுக்கான "சமாதானத் திட்டம் 2023 விழிப்புணர்வு மற்றும் திட்ட விளக்கக் கூட்டம்" நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை, பா.ஜோதி நிர்மலாசாமி, வணிகவரித்துறை ஆணையர், முனைவர் டி. ஜகந்நாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ். சங்கீதா, வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் மற்றும் ஏராளமான வணிகர்கள் கலந்து கொண்டனர்.

## திருப்பூரில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் கலை விழா!

திருப்பூர், நவ. 1 -

திருப்பூர் மாநகராட்சி ஜெய்வாபாய் மாதிரி நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் 2023-2024 ஆண்டுக்கான மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்.



சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் உள்ள மருதுபாண்டியர் நினைவிடத்தில் முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

### விருதுநகர் மாவட்டத்தில் சாலை விபத்தில்

# உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ.1 -

**விருதுநகர் மாவட்டத்தில் சாலைவிபத்தில் உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி, நிதியுதவி அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்கள், நேற்று முன்தினம் இது குறித்து வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டம், வ.புதுப்பட்டி கிராமம் அருகில் 30-10-2023 அன்று மாலை வத்திராயிருப்பிலிருந்து வ.புதுப்பட்டி கிராமத்திற்கு அர்ச்சுனாபுரம் கிராமம் வழியாக மாதவ ராயன்குளம் கண்மாய் அருகில் சென்று கொண்டிருந்த சிற்றுந்து கட்டுப்பாட்டை இழந்து சாலையின் ஓரத்தில் உள்ள தென்னந்தோப்பில் கவிழ்ந்ததால் ஏற்பட்ட விபத்தில் நந்தகுமார், (த/பெ.இருளப்பன்) மற்றும் பாண்டி (எ) தேவேந்திரன் த/பெ. சின்னப்பராஜ் ஆகிய இரு மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் பலத்த காயமடைந்து அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் சிறப்பு முகாம்!

## மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ. மகேஷ் அறிக்கை!



குமரி, நவ. 1 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ரெ.மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி, 01.01.2024ஐ தகுதி யேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது. கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கன்னியாகுமரி, நாகர்கோவில் மற்றும் குளச்சல் ஆகிய 3 சட்டமன்றத் தொகுதிகளிலும் 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும், பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை சிறப்பு முகாம்களும் நடைபெறவுள்ளது. அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர் பட்டியலில் உள்ள தங்களது விபரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், இதுவரை இடம் பெறாத பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போதுள்ள பட்டியலிலிருந்து நீக்கவும், 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம் மையங்களில் கொடுக்க வேண்டும்.

இந்த சிறப்பு முகாம்களில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திலுள்ள மாநகர,

ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள். அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்கள் (BLCs) ஆகியோர் இணைந்து இவ்வாய்ப்பினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தங்கள், முகவரி மாற்றம் செய்தல், ஆதார் எண்ணை வாக்காளர் பட்டியலுடன் இணைப்பு போன்ற பணிகளை சிறப்பாக மேற்கொண்டு தகுதியுள்ள வாக்காளர்களை விடுபட்டு விடாமல் இணைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**குறிப்பு:**

வாக்காளர் சேர்க்கும் பணியின் போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA 2), வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்கள் (BLCs) ஆகியோர் இந்த பணிகளில் முழுமையாக இருந்து நாடாளுமன்றத் தேர்தல் முடியும் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுடன் (BLO) இணைந்து இப்பணிகளை கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### திருப்பத்தூர் மாவட்ட

# விவசாய அணி நிர்வாகிகளுக்கான விண்ணப்பம்!

## திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!



திருப்பத்தூர், நவ. 1 -

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள நகர, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர்கள்(1), துணை அமைப்பாளர்கள் (5) பொறுப்பிற்கு விவசாய அணி சார்பில் நியமனம் செய்ய உள்ளதால் 4 நகரம், 15 ஒன்றியம், 3 பேரூராட்சிக்கு வாணியம்பாடியில் உள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் இன்று (01.11.2023 ) முதல் விண்ணப்பங்கள் வினியோகம் செய்யப்பட உள்ளது.

விண்ணப்பங்களை பூர்த்தி செய்து 07.11.2023 அன்று மாலை 5.00 மணிக்குள் வாணியம்பாடியில் உள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் வழங்குமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க. தேவராஜி எம்.எல்.ஏ. அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு!

# குமரி மேற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மனோதங்கராஜ் அறிக்கை!



குமரி, நவ. 1 -

வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் கன்னியாகுமரி மேற்கு மாவட்ட கழகத்தினர் தீவிரமாக ஈடுபட வேண்டுமென பால்வளத்துறை அமைச்சர் மனோதங்கராஜ் கேட்டுகொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கழகத் தலைவர் தமிழக முதலமைச்சர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி,

வருகின்ற 1/1/2024ஐ தகுதி ஏற்பு நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத்தினை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

கன்னியாகுமரி மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் 2023 ஆம் ஆண்டு சிறப்பு சுருக்க முறை வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திடும் பணி வாக்குச்சாவடி நிலை அலுவலரால் 27/ 10 / 2023 வெள்ளி முதல் 9 /12 /2023 சனிக்கிழமை வரை வீடு வீடாக சென்று சரி பார்க்கப்படுகிறது.

இதுதவிர 4/11/23 சனிகிழமை, 5/11/23 ஞாயிற்றுகிழமை, 18/11/23 சனிக்கிழமை, 19/11/23 ஞாயிற்றுக்கிழமை ஆகிய நான்கு நாட்களும் நிர்ணயிக்க ப்பட்ட வாக்குசாவடி மையங்களில் காலை 9:30 முதல் மாலை 5:30 மணிவரை சிறப்பு முகாம்கள் நடைபெறும்.

இந்த நாட்களில் வாக்காளர் தாமாகவே முன்வந்து வாக்காளர் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து விடுபட்ட வாக்காளர்களும் இடம் மாறிய வாக்காளர்களும் 1/10/2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்களை மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்தப் படிவங்களை அந்தந்த முகாம் மையங்களில் கொடுக்க வேண்டும்

அதன் அடிப்படையில் 1/10/2024ல் 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடி பெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும் தொகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள், மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை கழகத்தினர் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் .

வாக்காளர் சேர்க்கும் பணியின் போது நமது கழகத்தின் சார்பாக தொகுதி வாரியாக நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள் BLA2க்கள், வாக்குச்சாவடி உறுப்பினர்கள் BLC ஆகியோர், இந்திய தேர்தல் ஆணையம் 27/10/23ல் வெளியிட்டுள்ள சட்டமன்ற தொகுதி வாரியான வாக்காளர் பட்டியலை மாவட்ட கழகத்திடமிருந்து பெற்று அவைகளை சரி பார்ப்பதுடன் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் BLOக்களுடன் இணைந்து மேற்கண்டவாக்காளர் பட்டியல் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இது சமயம் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணி மற்றும்சிறப்பு முகாம்களில் கன்னியாகுமரி மேற்கு மாவட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கிளைக் கழகச் செயலாளர்கள் , மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட கழகத் தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் வாக்காளர் சேர்த்தல் நீக்கல், இடமாற்றம் செய்தல், முகவரிமாற்றம் செய்தல் போன்ற சீரமைப்பு பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறும் இப்பணிகள் குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை மாவட்ட கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் .

குமரி மேற்கு மாவட்ட செயலாளரும் அமைச்சருமான த.மனோதங்கராஜ் தமது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### திருவாரூர் ஆர்.பி.எஸ். எனும்

# ஆர்.பி.சுப்பிரமணியன் மறைவெய்தினார்!

## பொதுமக்கள் – கழகத்தினர் இறுதி அஞ்சலி!



திருவாரூர், நவ.1-

திருவாரூர் முன்னாள் ஒன்றிய செயலாளர் ஆர்.பி.எஸ்.என்று அழைக்கப்படும் ஆர்.பி.சுப்பிரமணியன் மறைவெய்தினார்.அன்னாருக்கு வயது 90 ஆகும். வயது முதிர்வின் காரணமாக உடல்நலம் குன்றி சிகிச்சைபெற்றுவந்த ஆர்.பி.எஸ். சிகிச்சை பலனின்றி மறைவெய்தினார்.

மறைந்த ஆர்.பி.எஸ். அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களிடம் மாறாப் பற்றுகொண்டிருந்தவர், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர் பகுதியின் கழக வளர்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர். திருவாரூர் ஒன்றிய கழக நிர்வாகியாக பலமுறை இருந்து கழக நிகழ்வுகளை திறம்பட நடத்தி, மாவட்டக் கழகத்தின் நன்மதிப்பை பெற்றவரும் ஆவார்.

மறைந்த ஆர்.பி.எஸ். எனும் ஆர்.பி.சுப்பிரமணியன் கழக ஒன்றிய செயலாளராகவும், மாவட்ட ஊராட்சி உறுப்பினராகவும், டி.சி.எம்.எப்.தலைவராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்து திறம்பட பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மறைந்த ஆர்.பி.எஸ். அவர்களின் மனைவி சாந்தநாயகி. இவர் ஏற்கனவே மறைந்துவிட்டார். இவருக்கு சங்கர் எனும் மகனும், செல்வி, வனிதா, சாந்தி என்கிற மகள்களும் உள்ளனர். அன்னாரின் மறைவின் தகவல் அறிந்த மாவட்டக் கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., உள்ளிட்ட கழக நிர்வாகி கள் ஆர்.பி.எஸ்.அவர்களை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறு தல் தெரிவித்து வருகின்றனர். அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (31.10.2023 செவ்வாய்) மாலை 3.00 மணிக்கு புலிவலத்தில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.



பள்ளிக் கல்வித் துறையில் காலியாக உள்ள 29 தட்டச்சர் பணியிடங்கள் மற்றும் 17 சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை 3 பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்டுள்ள பணிநாடுநர்களுக்கு 30.10.2023 அன்று நேரடிக் கலந்தாய்வு மூலம் இடங்கள் தெரிவு செய்யப்பட்டு நேற்று (31.10.2023) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியால் தலைமைச் செயலகத்தில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் ஜெ.குமரகுருபரன், மாநில திட்ட இயக்குநர் மருத்துவர் மா.ஆர்த்தி, பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் க.அறிவொளி மற்றும் உயர் அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் ஆர்.பி.எஸ். எனும்

# ஆர்.பி.சுப்பிரமணியன் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ.1-

திருவாரூர் முன்னாள் ஒன்றியச் செயலாளர் ஆர்.பி.எஸ்.என்று அழைக்கப்படும் ஆர்.பி.சுப்பிரமணியன் மறைவெய்தினார். அன்னாருக்கு வயது 90 ஆகும். வயது முதிர்வின் காரணமாக உடல்நலம் குன்றி சிகிச்சை பெற்றுவந்த ஆர்.பி.எஸ். சிகிச்சை பலனின்றி நேற்று (31.10.2023) மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.



சின்னாளப்பட்டியில் பசும்பொன் தேவர் திருமகனாரின் 116வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் தலைமையில் நூற்றுக் கணக்கான தி.மு.க.வினர் பசும்பொன் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் ஒன்றியச் செயலாளர் முருகேசன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.